

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாகையில் மாவட்ட கழக அலுவலகமான தளபதி அறிவாலயத்தில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன், நாகை நகரக் கழகச் செயலாளர் இரா.மாரிமுத்து மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### 15 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாமல் கிடந்த எதுமலை – பெரகம்பி செல்லும்

# சாலையை மேம்படுத்திட ஒன்றிய அரசு அனுமதி!

## அருண் நேரு எம்.பி.க்கு – பொதுமக்கள் பாராட்டு!

*திருச்சி, ஆக. 10 -*

15 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாத சாலையை விரைவில் சாலை மேம்பாடு செய்ய ஒன்றிய அரசு அனுமதி அளித்துள்ளதையடுத்து எம்.பி. அருண் நேருவுக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளார்.



திருச்சி நெடுஞ்சாலைத் துறை கோட்டத்திற்கு உட்பட்ட எதுமலையிலிருந்து பெரகம்பி செல்லும் சாலையின் நடுவில் கி.மீ 2/34/4 வரை சுமார் 2.100 கி.மீ இடைப்பட்ட தூரம் வனத்துறையின் கட்டுப்பாட்டில் உள்ள நிலத்தில் இச்சாலை செல்வதால் வனத்துறை அனுமதி பெற்ற பிறகுதான் சாலை மேம்பாடு செய்யப்பட வேண்டும் என்று வனத்துறையினர் தெரிவித்த காரணத்தினால் கடந்த 15 ஆண்டுகளுக்கு மேல் இச்சாலை எவ்வித பராமரிப்புமின்றி வாகன போக்குவரத்து மிகவும் சிரமமாக நடைபெற்று வருகிறது.

நெடுஞ்சாலைத்துறையின் மூலம் மேம்பாடு செய்யப்படும் சாலையின் நிலத்தின் அளவு 1.575 ஹெக்டார்ஸ் ஆகும். இந்த நிலத்திற்கு இழப்பீடாக இருமடங்கு நிலம் சுமார் 3.15 ஹெக்டார்ஸ் வனத்துறைக்கு ஒப்படைப்பு செய்தால் மட்டுமே சாலையினை மேம்பாடு செய்ய இயலும் என ஒன்றிய வனத்துறை சட்டத்தில் உள்ளது.

நீண்ட காலமாக சாலை அமைக்கப்படாத காரணத்தினால் தமிழக முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் மாவட்ட நிர்வாகம் வனத்துறை மற்றும் நெடுஞ்சாலைத்துறையும் இணைந்து 15 ஆண்டுகாலமாக மேம்பாடு செய்யாத இச்சாலையினை சரிசெய்யும் நோக்கில் சுமார் 3.15 ஹெக்டார்ஸ் இழப்பீடு நிலத்தினை ஆர்ஜிதம் செய்து வனத்துறைக்கு கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து தமிழ்நாடு அரசு மூலம் ஒன்றிய அரசின் கட்டுப்பாடில் உள்ள வனத்துறைக்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டது. தற்போது மாவட்ட வருவாய் துறையின் மூலம் மாற்று இடம் 3.15 ஹெக்டார்ஸ் இடம் வனத்துறை நிலத்திற்கு அருகிலேயே கொடுப்பதால் நெடுஞ்சாலைத்துறையின் மூலம் சாலையினை மேம்பாடு செய்ய ஒன்றிய அரசு வனத்துறையிடமிருந்து 30.07.2025 அன்று அனுமதி பெறப்பட்டுள்ளது. இச்சாலையினை மேம்பாடு செய்ய அரசிற்கு கருத்துரு சமர்ப்பிக்கப்பட்டு அனுமதி கிடைக்கப்பெற்றவுடன் விரைவில் சாலை மேம்பாடு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சாலை வசதிக்காக நெடுஞ்சாலைத்துறை, வனத்துறை, ஒன்றிய அரசு ஆகியவற்றுடன் இணைந்து 15 ஆண்டுகளாக பராமரிப்பு இல்லாத சாலையை ஒன்றிய அரசு மாநில அரசு அனுமதி உடன் சாலையை மேம்பாட்டு செய்ய ஒன்றிய அரசிடம் அனுமதி வழங்கி கொடுத்த பெரம்பலூர் பாராளுமன்ற உறுப்பினர் அருண் நேரு அவர்களுக்கு அப்பகுதி மக்கள் நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துள்ளனர்.

# நாடாளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர்!

## நேற்று முன்தினம் (08.08.2025) நிகழ்வுகள்!



**1. ஜி-7 உச்சி மாநாட்டிற்கு பிரதமர் உண்மையில் அழைக்கப்பட்டாரா?**

**கோவை கணபதி ராஜ்குமார் கேள்வி**



ஜி-7 நாடுகள் அமைப்பில் இந்தியா உறுப்பினராக இல்லாதபோதும் இந்திய பிரதமர் ஜீன் 15 முதல் 17, 2025 வரை கனடாவால் நடத்தப்பட்ட 51வது ஜி-7 உச்சி மாநாட்டில் பங்கேற்றார். பிரதமர் அழைக்கப்பட்டார் என்கிற செய்தி உண்மையா என நாடாளுமன்றத்தில் கோவை மக்களவை தொகுதி திமுக உறுப்பினர் கணபதி ராஜ்குமார் கேள்வி எழுப்பியுள்ளார்.

மாநாட்டில் விவாதிக்கப்பட்ட விசயங்கள் குறித்து செய்தி வெளியிடாதது ஏன் என்று கேட்டிருக்கும் அவர், அம்மாநாட்டில் இந்திய பிரதமர் ஜி-7 நாடுகளுடன் நடத்திய தனிப்பட்ட இருதரப்பு சந்திப்பு குறித்தும் கேட்டுள்ளார்.

**2. உயிர்காக்கும் மருந்துகளின்றி தவிக்கும் நோயாளிகள் சுகாதார துறையில் அலட்சியம் காட்டும் ஒன்றிய அரசு**



**தர்மபுரி அ. மணி**
**காஞ்சிபுரம் ஜி. செல்வம்**
**சி.என்.அண்ணாதுரை கண்டனம்**

ஒன்றிய அரசின் சுகாதார திட்டத்தின் பயனாளிகளுக்கு சிறப்பு மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் உயிர்காக்கும் மருந்துகளும் அறுவை சிகிச்சைக்குப் பின் தேவைப்படும் மருந்துகளும் மறுக்கப்படுவது குறித்து திமுக மக்களவை உறுப்பினர்கள் அ. மணி, ஜி. செல்வம் மற்றும் சி. என். அண்ணாதுரை நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மேலே குறிப்பிட்ட மருந்துகள் சுகாதார திட்டத்தின் பட்டியலில் சேர்க்கப்படாததே காரணம் என்றும் குறைந்தபட்சம் அத்தகைய மருந்துகளை வெளிச் சந்தையில் வாங்குபவர்களுக்கு அதற்குரிய பணம் வழங்கும் நடைமுறையை ஏற்படுத்தாது ஏன் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

நோயாளிகளுக்கு பரிந்துரைக்கப்பட்ட மருந்துகளை மறுக்கும்போது அதற்கான காரணத்தை தலைமை மருத்துவ அதிகாரி (CMO) எழுத்துப்பூர்வமாக வழங்க வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளனர்.

**3. உரங்களுக்கான மானியத் தொகை வழங்குவதில் தாமதம் ஏன்?**



**ஆரணி தரணி-வேந்தன் கேள்வி**

தமிழ்நாட்டில் விவசாய உரங்களுக்கான நேரடி பயனாளி திட்டத்தில்(DBT) பயன்பெறுபவர்கள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் தரணி வேந்தன் கேள்வி எழுப்பியுள்ளார். கடந்த மூன்று ஆண்டுகளில் தமிழ்நாட்டில் DBT இன் கீழ் விவசாயிகளின் கணக்குகளுக்கு நேரடியாக மாற்றப்பட்ட மானியத் தொகையில் உள்ள வேறுபாடுகள், தகுதியுள்ள விவசாயிகளுக்கு மானியங்களை சரியான நேரத்தில் மற்றும் வெளிப்படையாக கிடைப்பதில்லை என்கிற குற்றச்சாட்டுகள் மற்றும் தமிழ்நாட்டில் போதிய அளவு பயன்பாட்டுக்கு உரங்கள் வழங்கப்படாதது குறித்தும் அவர் நாடாளுமன்றத்தில் கேட்டுள்ளார்.

**4. மருத்துவ செலவுகளை குறைக்கவும் காப்பீட்டு பயன்களை அதிகரிக்கவும் நடவடிக்கை என்ன?**

**பெரம்பலூர் அருண் நேரு கேள்வி**



பொது மற்றும் தனியார் மருத்துவமனைகளில் அத்தியாவசிய மருத்துவ சேவைகளின் செலவைக் குறைக்க ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து திமுக மக்களவை உறுப்பினர் அருண் நேரு கேள்வி எழுப்பியுள்ளார்.

தனியார் மருத்துவமனைகளில் அறுவை சிகிச்சைகள், நோயறிதல் மற்றும் ஐசியூ சேவைகளின் விலையை ஒழுங்குபடுத்துவதற்கு அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?

உயர் சிகிச்சைகளுக்கு தனியார் மருத்துவமனைகளை சார்ந்திராமல் அரசு பொது மருத்துவமனைகளை மக்கள் பயன்படுத்த நடவடிக்கைகள் என்ன?

ஆயுஷ்மான் பாரத் மற்றும் மாநில சுகாதார காப்பீட்டுத் திட்டங்களின் கீழ் அதிக அளவில் பயன்பெற நடவடிக்கைகள் என்ன ?

நாடு முழுவதும் நோயாளிகளின் செலவுகளைக் குறைக்க பொது மருந்துகள், உள்ளூர் கொள்முதல் மற்றும் இணையவழி மருத்துவம் ஆகியவற்றின் பயன்பாட்டை ஊக்குவிக்க அரசிடம் உள்ள திட்டங்கள் என்ன? எனும் பல்வேறு கேள்விகளை அவர் எழுப்பியுள்ளார்.

**5. பழச்சாறு என ஏமாற்றப்படும் செயற்கை சுவையூட்டப்பட்ட பானங்களால் பாதிப்பு**

**தடுக்க தவறிய ஒன்றிய அரசு**

**வேலூர் டி.எம்.கதிர் ஆனந்த் குற்றச்சாட்டு**



குளிர்பான நிறுவனங்கள் குறைந்த கூழ் (pulp) கொண்ட பழ பானங்களை "100% பழச்சாறு" என்று தவறாக விளம்பரப்படுத்துவதையோ அல்லது மக்களை ஏமாற்றும் காட்சிகளைப் பயன்படுத்துவதையோ தடுக்க இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரநிலைகள் ஆணையம் (FSSAI) கடுமையான லேபிளிங் விதிமுறைகளை அமல்படுத்த வேண்டும் என வேலூர் திமுக மக்களவை உறுப்பினர் கதிர் ஆனந்த் நாடாளுமன்றத்தில் பேசியுள்ளார்.

2023 முதல் பதிவான விதிமுறை மீறல்களின் எண்ணிக்கை மற்றும் அதற்காக விதிக்கப்பட்ட அபராதங்கள் எவ்வளவு? என்று கேட்டுள்ள அவர், லேபிள்களின் முன்பக்கத்தில் உண்மையான உள்ளடக்க சதவீதத்தை குறிப்பிட அரசாங்கம் கட்டாயப்படுத்த வேண்டும் என கூறியுள்ளார்.

உண்மையான பழச்சாறுக்கும் செயற்கை சுவையூட்டப்பட்ட பானங்களுக்கும் உள்ள வேறுபாடு குறித்து நுகர்வோருக்கு, குறிப்பாக குழந்தைகள் மற்றும் பெற்றோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஒன்றிய அரசு தவறிவிட்டது எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

**6. போலி மருந்துகள் தயாரிக்கிறதா இந்தியா?**

**பொள்ளாச்சி ஈஸ்வரசாமி கேள்வி**



உலக சுகாதார அமைப்பின்(WHO) ஆய்வில் இந்தியா தரமற்ற மற்றும் போலியான மருந்துகளை உற்பத்தி செய்து வழங்கும் நாடு என குற்றம்சாட்டியிருப்பதை குறிப்பிட்டு பொள்ளாச்சி திமுக மக்களவை உறுப்பினர் ஈஸ்வரசாமி கேள்வி எழுப்பியுள்ளார். மேலும் ஆய்வின் முடிவு குறித்து அரசாங்கம் ஏதேனும் தீவிர நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டிருந்தால் அதன் விவரங்கள் கேட்டுள்ளார்.

### தமிழ்நாட்டுக்கு என்று தனித்துவமான கல்விக் கொள்கை!

# தமிழ்நாடு கல்விக் கொள்கைக்கு தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கம் வரவேற்பு- பாராட்டு!

## தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநிலத் தலைவர் கு.தியாகராஜன் அறிக்கை!

*சென்னை, ஆக. 10 -*

தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்க மாநில தலைவர் கு.தியாகராஜன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு;

தமிழக வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாள் இன்று 8.08.2025 தமிழ்நாடு முதலமைச்சர் சமூக நீதிக் காவலர் அவர்களால் வெளியிடப்பட்ட தமிழ்நாடு கல்விக் கொள்கை மிகவும் பாராட்டப்பட வேண்டியது. ஏற்கனவே ஒன்றிய அரசினால் தேசிய கல்விக் கொள்கை 2020ல் வெளியிடப்பட்டது. அதிலே மும்மொழிக் கொள்கை, 3 ,5 , 8 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு, மற்றும் குலக்கல்வி போன்ற ஏராளமான பிற்போக்கு சிந்தனை உள்ள திட்டங்கள் இடம் பெற்று இருந்தது.

இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்கள் தேசிய கல்விக் கொள்கை 2020 ஏற்றுக் கொண்ட நிலையில் தமிழ்நாடு சமூக நீதிக்கான மண் இங்கு பிற்போக்கு சிந்தனைகளுக்கு இடம் இல்லை என்பதை தெளிவாக எடுத்துக் கூறி ஒருபோதும் புதிய கல்விக் கொள்கை 2020 ஏற்க மாட்டோம் என்று திடமாக எடுத்துக் கூறி தமிழகத்திற்கு என்று புதிதாக தனியாக கல்விக் கொள்கை உருவாக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

இவ்வாறு அறிவித்ததால் விரக்தி அடைந்த ஒன்றிய அரசு ஏழை எளிய மாணவர்களின் கல்வி நலன் என்று கூட பாராமல் ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி இயக்கத்திற்கு வழங்க வேண்டிய சுமார் 2152 கோடியை இது வரை தராமல் வஞ்சித்து வருகிறது.

தேசிய கல்விக் கொள்கை 2020 ஏற்றுக் கொண்டால் உடனடியாக பல்லாயிரம் கோடி நிதி ஒதுக்கப்படும் என்று ஒன்றிய அரசு ஆசை வார்த்தைகளை அள்ளி வீசிய போதிலும் கூட எங்கள் தமிழ்நாடு என்பது பெரியார் வாழ்ந்த மண், பேரறிஞர் அண்ணா வாழ்ந்த மண்,



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் வாழ்ந்த மண், சமூகநீதி என்கின்ற ஒன்று இல்லாமல் ஒருபோதும் இங்கு தேசிய கல்விக் கொள்கையை ஏற்க மாட்டோம் அதாவது பத்தாயிரம் கோடி கொடுத்தாலும் தேசிய கல்விக் கொள்கையை நாங்கள் ஏற்க மாட்டோம் என்று கம்பீரத்தோடு முதல்வர் அறிவித்தார்கள்.

அதனை மெய்ப்பிக்கும் விதமாக இன்று இந்தியாவே வியந்து பார்க்கிற வகையில் தமிழ்நாட்டிற்கு என்று தனியாக தனித்துவமாக தமிழ்நாடு கல்விக் கொள்கையை கல்வியாளர்களை கொண்டு உருவாக்கி வெளியிட்டு இருக்கிறார்கள்.

அதில் தமிழ்நாடு எதிர்பார்த்த இரு மொழிக் கொள்கைதான் மொழிக் கொள்கையாக தொடர்ந்து கடைபிடிக்கப்படும் என்று கம்பீரமாக சொல்லப்பட்டு இருக்கிறது.

மேலும் 3, 5, 8 வகுப்புகளுக்கு பொதுத் தேர்வு முறை அமலபடுத்தப்படாது எனவும் ஏற்கனவே அமலில் உள்ள 11ஆம் வகுப்பு பொதுத் தேர்வும் இந்த கல்வியாண்டு முதலே இரத்து செய்யப்படும் என்றும் தெளிவாக அறிவிக்கப்பட்டுள்ளது. அனைத்து மாநிலங்களுக்கும் முன்னுதாரணமாக தங்களுக்கு என தனித்துவமான கல்விக் கொள்கையை உருவாக்கி வெளியிட்டு ஒட்டுமொத்த தமிழினத்திற்கு பெருமை சேர்த்திருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கும் துணை முதலமைச்சர் அவர்களுக்கும் சிறப்பாக இந்த கல்விக் கொள்கையை முன் நின்று உருவாக்கிய பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கும் தமிழ்நாடு ஆசிரியர் முன்னேற்ற சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஏற்கனவே உயர் கல்வியில் முதலிடத்தில் உள்ள தமிழ்நாடு புதிதாக கல்விக் கொள்கையை உருவாக்கிய தன் அடிப்படையில் 100 சதவீதம் உயர் கல்வி தேர்ச்சியை அடையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. விரைவில் ஒட்டுமொத்த இந்திய ஒன்றியத்தில் உள்ள மாநிலங்களும் தங்களுக்கென தனித்தனியாக தங்களுடைய மரபுக்கேற்றவாறு தங்களுடைய பண்பாட்டுக்கு ஏற்றவாறு அவர்களுக்கு கல்வி கொள்கையை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. நன்றி.

இவ்வாறு கு.தியாகராஜன் தெரிவித்துள்ளார்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு திருப்பூர் இரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா, தந்தை பெரியார் சிலை முன்பு அமைக்கப்பட்டுள்ள கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மத்திய மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினர். இதில் திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன் உள்பட கழக உடன் பிறப்புகள் பலர் கலந்து கொண்டனர்.

### கரூரில் 11வது தேசிய கைத்தறி தினக் கண்காட்சி

# 32 நெசவாளர்களுக்கு ரூ. 10.84 லட்சத்தில் நலஉதவிகள்!

## வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

*கரூர், ஆக.10 -*

11வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையினை தொடங்கி வைத்து. 32 நெசவாளர்களுக்கு ரூ. 10.84 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

கரூர் வெங்கமேடு தனியார் திருமண மண்டபத்தில் 11வது தேசிய கைத்தறி தினத்தை முன்னிட்டு சிறப்பு கைத்தறி கண்காட்சி மற்றும் விற்பனையை கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமையில், கரூர் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்து, 32 நெசவாளர்களுக்கு ரூ. 10.84 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

விழாவில் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பொற்கால ஆட்சியில் ஒவ்வொரு அரசுத் துறைகளுக் கும் முக்கியத்துவம் கொடுத்து. பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு சிறப்பான திட்டங்களை அறிவித்து, அதற்கான நிதிகளை வழங்கி பயன்பாட்டிற்கு கொண்டு வந்துள்ளார்கள்.

குறிப்பாக தேர்தல் நேரங்களில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளில் மிக முக்கியமான கைத்தறி நெசவாளர்கள் மற்றும் விசைத்தறி நெசவாளர்களின் கோரிக்கை களை நிறைவேற்றக்கூடிய வகையில், கைத்தறி நெசவாளர்களுக்கு 200 யுனிட் இலவச மின்சாரம் என்பதை 300 யுனிட் ஆக உயர்த்தியும். விசைத்தறி நெசவாளர்களுக்கு 250 யுனிட் இலவச மின்சாரத்தை 1000 யுனிட் ஆக உயர்த்தியும் வழங்கி நெசவாளர்களின் ஆதரவை பெற்றிருக்கக்கூடியவர்கள் முதலமைச்சர் அவர்கள்.

அதேபோல் நெசவாளர்களுக்கு முதியோர் ஓய்வூதியம் ரூ.1000 லிருந்து, ரூ.1200 ஆக உயர்த்தியும். குடும்ப ஓய்வூதியம் ரூ. 1000 லிருந்து ரூ.1200 ஆக உயர்த்தியும் வழங்கி உள்ளார்கள். கரூர் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 11 கைத்தறி நெசவாளர்களுக்கு தலா ரூ. 4 இலட்சம் வீதம், ரூ. 44 இலட்சம் மதிப்பீட்டில் வீடுகள் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

கரூர் மாவட்டத்தில் சிறிய ஜவுளி பூங்காக்கள் அமைப்பதற்காக 9 இடங்கள் தேர்வு செய்யப்பட்டு ரூ. 7200 கோடி நிதிகளை வழங்கி, 1 சிறிய ஜவுளி பூங்காவிளை முதலமைச்சர் அவர்களின் ஆசியோடு, கைத்தறி துறை அமைச்சர் திறந்து வைத்துள்ளார்கள். மீதமுள்ள சிறிய ஜவுளி பூங்காக்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இன்றைய தினம் தொடங்கிவைக்கப்பட்டுள்ள கைத்தறி கண்காட்சியில் அனைத்து இரகங்களுக்கும் 20 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படுகிறது. பொதுமக்கள் அனைவரும் இந்த விற்பனைக் கண்காட்சியில் இடம்பெற்றுள்ள கைத்தறி இரகங்களை வாங்கி நெசவாளர்களுக்கு தங்களுடைய ஆதரவை வழங்க வேண்டும்.

இதனைத் தொடர்ந்து நெசவாளர் முத்ரா திட்டத்தின் கீழ் 10 நெசவாளர்களுக்கு ரூ. 6 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளும். குடும்ப ஓய்வூதிய திட்டத்தின் கீழ் 2 நெசவாளர்களுக்கு ரூ. 49,096 மதிப்பீட்டில் குடும்ப ஓய்வூதிய ஆணைகளும், சேமிப்பு மற்றும் பாதுகாப்பு திட்டத்தின் கீழ் 5 நெசவாளர்களுக்கு ரூ. 3.95 இலட்சம் மதிப்பீட்டில் கடனுதவிகளும், கைத்தறி ஆதரவு திட்டத்தின் கீழ் 10 நெசவாளர்களுக்கு தலா ரூ. 4,000 மதிப்பீட்டில் அச்சு மற்றும் ஒடிகளும் மற்றும் சிறந்த வடிவமைப்பிற்கான போட்டியில் வள்ளுவர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியைச் சார்ந்த முதல் 3 இடங்களைப் பெற்ற மாணாக்கர்களுக்கு பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களும் என மொத்தம் 32 நெசவாளர்களுக்கு ரூ. 10.84 இலட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை செந்தில்பாலாஜி வழங்கினார்.



மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 7ம் ஆண்டு நினைவு தின அமைதி பேரணி நடைபெற்று மயிலாடுதுறை அண்ணா பகுத்தறிவு மன்றத்தில் உள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலைக்கு மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் தலைமையில் கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். உடன் மயிலாடுதுறை நகரக் கழகச் செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் வை.சௌமியன், பொதுக் குழு உறுப்பினர்கள் எஸ்.சங்கரநாராயணன், ஹர்ஷத் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.